| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| திரு.சா.சேதுராமவர்மா, | 1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், |
| சென்னை - 600 006. | கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மற்றும் மயிலாடுதுறை. |
| | 2. இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |
| | 3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள். |

**ந.க.எண். 023720 /எச்1/2023** **நாள் : 29.05.2023**

**ஐயா/அம்மையீர்**

**பொருள் :** சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2023 - விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டல்-II– விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்வது மற்றும் விண்ணப்பத் தொகையினை ஆன்-லைன் மூலம் கருவூலத்தில் செலுத்துவது தொடர்பான அறிவுரைகள் – சார்பு.

**பார்வை:** அரசுத் தேர்வுகள் இயக்கக செய்திக் குறிப்பு நாள்:.29.05.2023

-----

மார்ச்/ஏப்ரல் 2023, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு தொடர்பாக விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்கள் 30.05.2023 **பிற்பகல் முதல்** தங்களது விடைத்தாள் நகல்களை இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்ய பார்வையில் கண்டுள்ள செய்திக்குறிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அச்செய்திக்குறிப்பில் விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்யும் மாணவர்கள், மறுமதிப்பீடு / மறுகூட்டல்-II-க்கு விண்ணப்பிக்க விரும்பினால், அதற்கான விண்ணப்பத்தினை இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து 31.05.2023 **பிற்பகல் முதல்** 03.06.2023 **மாலை 5.00 மணிவரை** சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் / முதன்மைக்கல்வி அலுவலகத்தில் உரிய கட்டணத் தொகையை விண்ணப்பத்தோடு சேர்த்து ஒப்படைக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அதற்கேற்ப அனைத்து உதவி இயக்குநர்களும் / தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, மயிலாடுதுறை, காரைக்கால் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் புதுச்சேரி இணை இயக்குநர் (கல்வி) ஆகியோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றி தங்களது மாவட்டத்தில் உள்ள **பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்களிடமிருந்து** மறுமதிப்பீடு / மறுகூட்டல்-II விண்ணப்பங்களைப் பெற்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

1. விடைத்தாள் நகல் பெற்ற தேர்வர்கள் மட்டுமே, மறுமதிப்பீடு (RV) / மறுகூட்டலுக்கு (RT-II) விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவார்கள்.

2. தேர்வர்கள் விடைத்தாள் நகலை பதிவிறக்கம் செய்தபின், அதே இணையதளத்தில் மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கான (RT-II) விண்ணப்பத்தையும் பதிவிறக்கம் செய்து, அவ்விண்ணப்பத்திலுள்ள கலங்களை பூர்த்தி செய்து கீழ்க்காணும் கட்டணத் தொகையோடு சேர்த்து அவ்விண்ணப்பத்தை உதவி இயக்குநர்கள் / முதன்மைக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைப்பார்கள்.

**மறுமதிப்பீடு**

| | |
|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | - ரூ.505/- |

**மறுகூட்டல்-II**

| | |
|---|---|
| உயிரியல் பாடம் மட்டும் | - ரூ.305/- |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | - ரூ.205/- |

3. உதவி இயக்குநர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்கள் அலுவலகத்தில், தேர்வர்களிடமிருந்து மேற்கண்டவாறு விண்ணப்பங்களை பெற்றவுடன் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களுக்கான USER ID & PASSWORD-ஐ பயன்படுத்தி 31.05.2023 **பிற்பகல் முதல்** 03.06.2023 **மாலை** 5.00 **மணிவரை ஆன்-லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.** ஒவ்வொரு விண்ணப்பத்தினையும் பதிவேற்றம் செய்து, அதற்கான ஒப்புகைச் சீட்டினை சம்பந்தப்பட்ட தேர்வர்களிடம் வழங்குதல் வேண்டும்.

...3...

4. 05.06.2023 **அன்று நண்பகல் 12.00 மணியளவில்** மறுமதிப்பீடு / மறுகூட்டல்-II-க்கு விண்ணப்பித்தத் தேர்வர்களின் விவரங்களை (Summary Report) பதிவிறக்கம் செய்தல் வேண்டும். பின்னர், விண்ணப்பத்திற்கென்று பெறப்பட்ட தொகையினை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி ஆன்-லைன் மூலம் (e-challan Remittance) கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டல்-II-க்கான கட்டணத்தினையும் செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | Chennai |
| Treasury | PAO (South) Chennai |
| Department receiving receipts | 04304 Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 Accounts Officer |
| கணக்குத் தலைப்பு | 0202 01 102 AA 22731 - Retotalling / Re-valuation |

5. மேற்கண்டவாறு தேர்வர்களின் விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டல்-II-க்கான கட்டணத் தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும்
   (1) செலுத்துச் சீட்டு (**Payment Receipt**)
   (2) மறுமதிப்பீடு / மறுகூட்டல்-II-ற்கு விண்ணப்பித்து பதிவிறக்கம் செய்யப்பட்ட தேர்வர்களின் விவரங்கள் (**Summary Report**) மற்றும்
   (3) முதன்மைக் கல்வி அலுவலரின் / உதவி இயக்குநரின் கையொப்பமிடப்பட்ட (with Sign) கீழ்க்காணும் சான்றிதழ் (**Certificate**)

ஆகியவைகளை இணைத்து திரு.கோ.சுரேஷ்ராஜா, துணை இயக்குநர் (பொது) (பொ), அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் வழியாக 06.06.2023 -**க்குள்** அனுப்பி வைத்திட வேண்டும்.

**<u>சான்றிதழ்</u>**

மறுமதிப்பீடு / மறுகூட்டல்-II-க்கு விண்ணப்பித்த தேர்வர்களின் விண்ணப்பங்கள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்பட்டது.

**முதன்மைக் கல்வி அலுவலர் / உதவி இயக்குநர்**

(அலுவலக முத்திரை)

**ஒம்/-**

**இயக்குநர்**

**<u>இணைப்பு:</u>** விடைத்தாள் மறுமதிப்பீடு / மறுகூட்டலுக்கான கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்

**<u>நகல்</u>**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் } -தகவலுக்காக
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் }
3. தொழில்நுட்பப் பிரிவு (அலுவலகம்)
4. கண்காணிப்பாளர், அ3 பிரிவு (அலுவலகம்)